**செப்டம்பர் – 06**

# TNPSC துளிகள்


- தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் (TANSIM) தலைவராக சிங்கை ஜி. ராமச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- தமிழ்நாடு அரசு 1865 ஆம் ஆண்டு முதல் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க சொத்து ஆவணங்கள் மற்றும் 2018 ஆம் ஆண்டு வரையிலான பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களை மின்மயமாக்க உள்ளது.
    - பதிவுத் துறையானது, ஏற்கனவே மின்மயமாக்கப்பட்ட ஆவணங்களை மீண்டும் ஸ்கேன்/வருடல் செய்யாமல், 1865 முதல் 1974 ஆம் ஆண்டு வரையிலான 7.06 கோடி பழைய வில்லங்கச் சான்றிதழ்கள் (EC) / குறியீடு-2 ஆவணங்கள் மற்றும் 5.68 கோடி பிறப்பு, இறப்பு ஆவணங்கள் உட்பட 11.14 கோடி பக்கங்களை ஸ்கேன்/வருடல் செய்ய திட்டமிட்டுள்ளது.
- வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA), திரிபுராவிலிருந்து ஆஸ்திரியா மற்றும் நெதர்லாந்துக்கு NPOP சான்றிதழ் பெற்ற 18 மெட்ரிக் டன் பாரம்பரிய அரிசியை ஏற்றுமதி செய்ய வசதி செய்துள்ளது.
- ஆரோக்கியமான உணவு மற்றும் முறையான ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, இந்தியாவில் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 முதல் 7 ஆம் தேதி வரை தேசிய ஊட்டச்சத்து வாரம் (NNW) 2026 அனுசரிக்கப்படுகிறது.
    - இந்தியாவில் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வை பரப்பச் செய்வதற்காக, உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியம் மூலம் 1982 ஆம் ஆண்டில் தேசிய ஊட்டச்சத்து வாரம் தொடங்கப்பட்டது.
- உலகின் மிக உயரமான கட்டடங்களுக்குப் பின்னணியில் உள்ள பொறியியல் மற்றும் கட்டிடக்கலையை சிறப்பிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 3 அன்று உலக வானளாவிய கட்டிட தினம் அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சட்டத் திருத்தம்

- தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சட்டம், 2025-ஐ திருத்துவதற்கான மசோதா 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 3 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிமுகப் படுத்தப் பட்டது.
- 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 அன்று அரசிதழ் அறிவிப்பின் மூலம் இந்திய தர நிர்ணய பணியகம் (BIS) அதனை திரும்பப் பெற்றதைத் தொடர்ந்து, இந்திய தேசிய கட்டடக் குறியீடு, 2016-க்கான குறிப்புகளை நீக்க இந்த மசோதா வகை செய்கிறது.
- தீயணைப்பு மற்றும் கட்டட விதிமுறைகளை நவீனப்படுத்துவதற்கான வணிக சீர்திருத்த செயல் திட்டத்தின் (BRAP), 2026 பரிந்துரைகளைத் தொடர்ந்து இந்தத் திருத்தம் மேற்கொள்ள ப்பட்டுள்ளது.
- தேசிய கட்டடக் குறியீட்டிற்கான குறிப்புகளுக்குப் பதிலாக தீயணைப்பு மற்றும் கட்டட விதிகளுக்கான தாராளமயமாக்கப்பட்ட மற்றும் நவீன தரநிலைகளை இது முன் மொழிகிறது.
- முன்மொழியப்பட்ட இந்தத் திருத்தமானது, கட்டுமான அனுமதி மற்றும் கட்டட

விதிமுறைகள் தொடர்பான 2026 ஆம் ஆண்டு வணிகச் சீர்திருத்த செயல் திட்டத்தின் (BRAP) பரிந்துரைகளுடன் தமிழ்நாட்டின் தீயணைப்பு மற்றும் கட்டடச் சட்டங்களை ஒருங்கிணைக்கத் திட்டமிட்டுள்ளது.




## பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் – கடமகுட்டை




- ❖ தமிழ்நாட்டின் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கடமகுட்டை கிராமத்தில் பல கற் திட்டைகள் மற்றும் கல்வட்டப் புதைகுழிகளுடன் கூடிய பெருங்கற்கால ஈமச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- ❖ இந்த இடம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும், ஏனெனில் இதனைச் சுற்றியுள்ள கட்டமைப்புச் சுவர் இன்னும் காணப்படுகிறது, மேலும் ஈமச்சின்னங்கள் திட்டமிடப் பட்ட வடிவமைப்பில் அமைக்கப்பட்டுள்ளன.
- ❖ மெருகூட்டப்பட்ட கற்கோடரிகள், மாக்கல் பொருட்கள், அரைக்கும் கற்கள் மற்றும் பிற கல் கருவிகள் உட்பட பல புதிய கற்கால தொல்பொருட்கள் இந்த இடத்தைச் சுற்றி காணப் பட்டன.
- ❖ மூன்று புதிய கற்கால மெருகூட்டும் பள்ளங்களைக் கொண்ட ஒரு பெரிய

இயற்கையான பாறை இங்கு கண்டுபிடிக்கப்பட்டது, இது கல் கருவிகளை முடிக்கும் மற்றும் பதப்படுத்தும் செயல்பாடுகளைக் குறிக்கிறது.

- இந்த இடத்தில் களிமண் உருவங்கள், தேய்க்கும் கற்கள் மற்றும் முதுமக்கள் தாழிகளின் துண்டுகள் ஆகியவை முக்கிய சுற்றுச்சுவருக்கு வெளியே அமைந்துள்ள ஒரு தனித்த கற்திட்டையுடன் காணப்படுகின்றன.
- கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆவணப்படுத்தப்பட்ட 200க்கும் மேற்பட்ட பெருங் கற்கால ஈமச்சின்னங்கள் உள்ள அதே சமயம் கடமகுட்டையானது புதிய கற்காலத்தில் இருந்து தற்போதைய காலகட்டம் வரையிலான கலாச்சாரத் தொடர்ச்சியைப் பிரதிபலிக்கிறது.

## சென்னையில் புதிய ஒருங்கிணைந்த தலைமைச் செயலக வளாகம்

- தமிழ்நாடு முதலமைச்சர் சி. ஜோசப் விஜய், சென்னையில் 20 லட்சம் சதுர அடி பரப்பளவில், ₹1,200 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய ஒருங்கிணைந்த தலைமைச் செயலக வளாகத்தைக் கட்டும் திட்டத்தை அறிவித்தார்.
- தற்போது, மாநிலத்தின் சட்டமன்றமும் தலைமைச் செயலகமும் மெரினா கடற்கரைக்கு அருகிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க புனித ஜார்ஜ் கோட்டை வளாகத்தில் செயல்பட்டு வருகின்றன.
- திறமையான நிர்வாகத்தை உறுதி செய்வதற்கும், அடுத்த 100 ஆண்டுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் உலகத் தரம் வாய்ந்த பொது நிர்வாக உள்கட்டமைப்பை உருவாக்குவதற்கும், இந்த வளாகத்தில் நவீன வசதிகளுடன் கூடிய சட்டமன்றம், முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் பல்வேறு துறைகளின் அலுவலகங்கள் இடம் பெறும்.
- அவர் சட்டமன்றத்தில் விதி 110 என்பதின் கீழ் தாமாக முன்வந்து இந்த அறிக்கையை வெளியிட்டார்.
- புனித ஜார்ஜ் கோட்டையின் வரலாற்றை நினைவு கூர்ந்த திரு. விஜய், அதன் கட்டுமானம் 1640-ஆம் ஆண்டில் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியால் அதன் வணிக நடவடிக்கைகளுக்காக கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் தொடங்கப்பட்டு 1644-ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது என்றார்.
- 1652-ஆம் ஆண்டில் மாகாண அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்ட பிறகு, அது பிரிட்டிஷ் ஆட்சியின் அதிகாரப்பூர்வ தலைமையகமாக செயல்பட்டது.
- சுதந்திரத்திற்குப் பிறகு, அது தமிழ்நாடு அரசின் செயலகமாக தொடர்ந்து செயல் பட்டது.
- ஏறக்குறைய 400 ஆண்டுகளாக, இது மாநிலத்தின் நிர்வாக மையமாகவும், அதன் ஆளுகை பாரம்பரியத்தின் சின்னமாகவும் விளங்கி வருகிறது.
- 107 ஏக்கர் பரப்பளவுள்ள புனித ஜார்ஜ் கோட்டை வளாகத்தில், சுமார் நான்கு ஏக்கர் மட்டுமே செயலகத்தால் பயன்படுத்தப்படுகிறது மற்றும் அது தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது.
- மீதமுள்ள பகுதி மத்திய பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் இந்திய தொல்லியல் ஆய்வுத் துறையின் (ASI) கட்டுப்பாட்டில் இருப்பதால், வளாகத்தை விரிவுபடுத்தவோ அல்லது மேம்படுத்தவோ முடியவில்லை.
- தற்போது, செயலகம் இரண்டு கட்டிடங்களில் இருந்து செயல்படுகிறது என்ற நிலையில் பிரதான செயலகக் கட்டிடம் என்று அறியப்படும் புனித ஜார்ஜ் கோட்டை, முதலில் ஆளுநரின் இல்லமாகக் கட்டப்பட்டது.
- தற்போது இதில் சட்டமன்றம், முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் தலைமைச்

செயலாளரின் அலுவலகங்கள், நிதித் துறை மற்றும் பிற முக்கியத் துறைகள் அமைந்துள்ளன.

- இந்த வளாகம் 2.07 லட்சம் சதுர அடி பரப்பளவைக் கொண்டுள்ளது.
- மாநில அரசின் விரிவடைந்து வரும் நிர்வாகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, நாமக்கல் கவிஞர் மாளிகை 1978-ஆம் ஆண்டில் தரைத்தளம் மற்றும் 10 தளங்களுடன், 3.75 லட்சம் சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டது.
- பல்வேறு துறைகளின் செயலாளர்கள் மற்றும் அதிகாரிகள், அத்துடன் 30-க்கும் மேற்பட்ட அரசுத் துறைகளைச் சேர்ந்த 6,000க்கும் மேற்பட்ட ஊழியர்கள் இந்தக் கட்டிடங்களில் பணியாற்றுகின்றனர்.
- மேலும், புனித ஜார்ஜ் கோட்டைக்குள் மீதமுள்ள பகுதிகள் பாதுகாப்பு மற்றும் இந்திய தொல்லியல் துறை (ASI) நிலமாக இருப்பதால், கூடுதல் கட்டிடங்களைக் கட்டவோ அல்லது மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவோ முடியாது.





# தேசியச் செய்திகள்

## தேசிய கணக்குகள் புள்ளிவிவரங்கள் 2026

- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) 2022-23 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு தேசிய கணக்குகள் புள்ளிவிவரங்கள் 2026-ஐ வெளியிட்டது.
- இந்த வெளியீடானது மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP), மொத்த மதிப்புக் கூட்டல் (GVA), தேசிய வருமானம், நுகர்வு, சேமிப்பு, மூலதன உருவாக்கம், பொதுத்துறை மற்றும் வெளிப்புற பரிவர்த்தனைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 64 அறிக்கைகளைக் கொண்டுள்ளது.
- இது காலாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளுடன், 2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டுகளுக்கான புதுப்பிக்கப்பட்ட இறுதி மதிப்பீடுகள், 2024-25 ஆம் ஆண்டிற்கான முதல் திருத்தப்பட்ட மதிப்பீடுகள் மற்றும் 2025-26 ஆம் ஆண்டிற்கான தற்காலிக மதிப்பீடுகளை உள்ளடக்கியுள்ளது.

- ❖ புதிய உற்பத்தியாளர் விலை குறியீடு (PPI), தொழில்துறை உற்பத்திக் குறியீடு (IIP) மற்றும் வங்கி சேவைகள் விலை குறியீடு (BkSPI) ஆகியவற்றைப் பயன்படுத்தி மதிப்பீடுகள் திருத்தப்பட்டன என்பதோடு இவை அனைத்தும் புதுப்பிக்கப்பட்ட நிர்வாகத் தரவுகளுடன் 2022-23-ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டுள்ளன.
- ❖ புதுப்பிக்கப்பட்ட குறிகாட்டிகள் 2022-23 ஆம் ஆண்டு முதல் GDP மற்றும் GVA மதிப்பீடுகளில் திருத்தங்களை ஏற்படுத்தியுள்ளன, இதில் சுரங்கம், உற்பத்தி, வர்த்தக சேவைகள் மற்றும் பொது நிர்வாகம் போன்ற துறைகளில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.
- ❖ புதுப்பிக்கப்பட்ட மதிப்பீடுகளின் கீழ், 2025-26 ஆம் ஆண்டிற்கான உண்மையான GDP வளர்ச்சி 7.7% இலிருந்து 7.8% ஆக அதிகரித்துள்ளது, அதே நேரத்தில் நடப்பு விலையிலான GDP வளர்ச்சி 8.9% இலிருந்து 8.6% ஆகத் திருத்தப்பட்டுள்ளது.




## ரக்ஷா (RAKSHA) – பாதுகாப்பு ராஜதந்திர கட்டமைப்பு




- ❖ இந்தியாவின் பாதுகாப்பு ராஜதந்திரம் மற்றும் உலகளாவிய உத்திசார் கூட்டாண்மைகளுக்கான 10 ஆண்டு கட்டமைப்பான 'ரக்ஷா'-வை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 3 அன்று வெளியிட்டார்.
- ❖ ரக்ஷா என்பது இந்தியாவின் இருதரப்பு மற்றும் பலதரப்பு பாதுகாப்புக் கூட்டாண்மைகள், இராணுவ ஒத்துழைப்பு மற்றும் உலகளாவிய பாதுகாப்பு ஈடுபாட்டை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது நட்பு நாடுகளுடன் கூட்டுப் பயிற்சிகள், பயிற்சி, இராணுவக் கல்வி, தொழில் முறைப் பரிமாற்றங்கள் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- ஆத்மநிர்பார் பாரத் திட்டத்தின் கீழ் கூட்டு மேம்பாடு, கூட்டு உற்பத்தி, தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் விநியோகச் சங்கிலி ஒருங்கிணைப்பு உள்ளிட்ட பாதுகாப்புத் தொழில் துறை ஒத்துழைப்பை இந்தக் கட்டமைப்பு ஊக்குவிக்கிறது.
- இந்திய பாதுகாப்பு ஏற்றுமதிகளை மேம்படுத்துவதையும், நம்பகமான உலகளாவிய பாதுகாப்பு உற்பத்தி பங்குதாரராக இந்தியாவை நிலை நிறுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## நிரந்தர நடுவர் நீதிமன்றம் (PCA) மற்றும் சிந்து நதிநீர் ஒப்பந்தம்




- சிந்து நதிநீர் ஒப்பந்தம் (IWT), 1960-இன் கீழ் இந்திய நீர்மின் திட்டங்களில் அனுமதிக்கப் பட்ட அதிகபட்ச நீர் தேக்கும் திறன் (Pondage) குறித்த நிரந்தர நடுவர் நீதிமன்றத்தின் (PCA) 2026 ஆம் ஆண்டு மே மாத தீர்ப்பை இந்தியா நிராகரித்துள்ளது.
- ஜம்மு மற்றும் காஷ்மீரில் உள்ள இந்தியாவின் கிஷன்கங்கா (330 மெகாவாட்) மற்றும் ராட்டில் (850 மெகாவாட்) ஓடும்-நதி நீர்மின் திட்டங்கள் தொடர்பாக இந்த சர்ச்சை எழுந்துள்ளது.
- பாகிஸ்தானுக்குள் நீர் செல்வதை அவை பாதிக்கக்கூடும் என்று கூறி, நீர் தேக்கம் மற்றும் மதகு வடிவமைப்புகளுக்கு பாகிஸ்தான் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.
- பாகிஸ்தான் நடுவர் நீதிமன்றம் மற்றும் நடுநிலை நிபுணர் வழிமுறைகளை இணையாகப் பின்பற்றியதால் இது சட்டவிரோதமாக அமைக்கப்பட்டது என்று கூறி, நடுவர் நீதிமன்றச் செயல்முறையை இந்தியா நிராகரித்துள்ளது.
- உலக வங்கியின் வசதியாளர் மற்றும் கையொப்பமிட்டவராகவும், இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே 1960 ஆம் ஆண்டில் சிந்து நதிநீர் ஒப்பந்தம் கையெழுத்தானது.

- ராவி, பியாஸ் மற்றும் சட்லெஜ் நதிகள் இந்தியாவிற்கும், சிந்து, ஜீலம் மற்றும் சீனாப் நதிகள் பெருமளவில் பாகிஸ்தானுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.
- ஒப்பந்தத்தின் தொழில்நுட்ப நிபந்தனைகளுக்கு உட்பட்டு, ஓடும்-நதி நீர்மின் உற்பத்தி உட்பட மேற்கு நதிகளின் மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாட்டிற்கு இந்தியா அனுமதிக்கப் படுகிறது.
- சிந்து நதிநீர் ஒப்பந்தமானது நிரந்தர சிந்து ஆணையம், நடுநிலை நிபுணர் மற்றும் நடுவர் நீதிமன்றம் ஆகிய மூன்று கட்ட சர்ச்சை தீர்வு பொறிமுறையை வழங்குகிறது.
- 2025 ஆம் ஆண்டு பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து சிந்து நதிநீர் ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக இந்தியா தெரிவித்துள்ளது, மேலும் நடுவர் நீதிமன்ற நடவடிக்கைகளில் இந்தியா பங்கேற்கவில்லை.
- சர்வதேச மோதல்களின் அமைதியான தீர்வுக்கான 1899 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் கீழ், நடுவர் மன்றம் மற்றும் சர்வதேச மோதல்களை அமைதியான முறையில் தீர்ப்பதற்கு வசதியாக 1899 ஆம் ஆண்டில் நிரந்தர நடுவர் நீதிமன்றம் (PCA) நிறுவப் பட்டது.
- PCA என்பது ஒரு சுயாதீனமான அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும், இது ஐக்கிய நாடுகள் சபையின் (UN) நிறுவனம் அல்ல, ஆனால் இது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் நிரந்தரப் பார்வையாளர் அந்தஸ்தைக் கொண்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா-உஸ்பெகிஸ்தான் யுரேனிய ஒப்பந்தம்




- அணுசக்தி பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் உஸ்பெகிஸ்தானுடன் நீண்ட கால யுரேனியம் விநியோக ஒப்பந்தத்தை இறுதி செய்ய இந்தியா முடிவு செய்துள்ளது.
- உலகின் யுரேனியத்தில் கிட்டத்தட்ட 6.6% உஸ்பெகிஸ்தான் உற்பத்தி செய்கிறது, இது இந்தியாவின் அணுசக்தி எரிபொருள் தேவைகளுக்கு ஒரு முக்கிய ஆதாரமாக உள்ளது.

- இந்தியா தற்போது 8.78 ஜிகாவாட் (GW) திறன் கொண்ட 24 அணுமின் உலைகளை இயக்கி வருகிறது, மேலும் 2047 ஆம் ஆண்டிற்குள் 100 GW அணுசக்தி திறனை அடைவதை இலக்காகக் கொண்டுள்ளது.
- உலகின் மிகப்பெரிய யுரேனியம் உற்பத்தியாளரான கஜகஸ்தானுடன் இந்தியா ஏற்கனவே நீண்ட கால யுரேனியம் விநியோக ஒப்பந்தத்தைக் கொண்டுள்ளது.
- கனடாவைச் சேர்ந்த கேம்கோ (Cameco) நிறுவனம் 2027 மற்றும் 2035 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் சிவிலியன் அணுசக்திக்காக சுமார் 22 மில்லியன் பவுண்டுகள் யுரேனியம் தாது செறிவை இந்தியாவிற்கு வழங்கும்.
- 2015 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா-இந்தியா அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் கீழ் ஆஸ்திரேலிய யுரேனியத்தை இந்தியாவிற்கு அமைதியான முறையில் ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகளையும் இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் இறுதி செய்து உள்ளன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## EOS-05 புவி கண்காணிப்புத் திட்டம்





- இஸ்ரோ (இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம்) ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து GSLV-F17 (புவி ஒத்திசைவு செயற்கைக்கோள் ஏவுகணை வாகனம்-F17) ஏவுகலனைப் பயன்படுத்தி EOS-05 செயற்கைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.
- இது புவி கண்காணிப்பு செயற்கைக்கோளான EOS-05 ஐ துணை-புவி ஒத்திசைவு மாற்றுப் பாதையில் (Sub-GTO) நிலைநிறுத்தியுள்ளது.
- புவி ஒத்திசைவு சுற்றுப்பாதையில் இருந்து செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்ட இந்தியாவின் முதல் படமாக்கும் செயற்கைக்கோள் EOS-05 ஆகும், இது பெரிய பகுதிகளை மீண்டும் மீண்டும் கண்காணிக்க உதவுகிறது.
- புவி கண்காணிப்புத் தரவுகளை விவசாயம், பேரிடர் மேலாண்மை, நீர் வளங்கள், காடுகள், சுற்றுச்சூழல் கண்காணிப்பு மற்றும் நகர்ப்புறத் திட்டமிடல் ஆகியவற்றிற்கு பயன்படுத்தலாம்.

- இந்தத் திட்டம் GSLV-இன் 19வது பயணமாகும், இது விண்கலத்தை அதிக ஆற்றல் கொண்ட சுற்றுப்பாதைகளில் நிலைநிறுத்தும் இந்தியாவின் திறனை வெளிப்படுத்துகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## பிச்சாவரம் சதுப்புநில மதிப்பு

- சமீபத்திய ஆய்வு ஒன்று பிச்சாவரம் சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்பின் மொத்த பொருளாதார மதிப்பை (TEV) ₹2,485.38 கோடியாக மதிப்பிட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் உள்ள பிச்சாவரம் சதுப்புநிலக் காடுகள் கடலோரப் பாதுகாப்பு, பல்லுயிர்ப் பாதுகாப்பு, மீன் வளம், சுற்றுலா மற்றும் பருவநிலை ஒழுங்குமுறை போன்ற சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளை வழங்குகின்றன.
- தாவரங்கள் மற்றும் மண்ணில் சேமிக்கப்படும் கார்பன் உட்பட அதன் நீலக் கார்பன் சொத்து மதிப்பு ₹1,612.40 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- மண்ணில் உள்ள கரிம கார்பன் மட்டுமே ₹1,224.63 கோடியைக் கொண்டுள்ளது, இது அதிக அளவிலான கார்பன் சதுப்புநில படிவுகளில் நிலத்தடியில் சேமிக்கப்பட்டுள்ளது என்பதைக் காட்டுகிறது.
- இந்த ஆய்வானது சதுப்புநிலத் தாவரங்களில் ஹெக்டேருக்கு சராசரியாக 79.449 டன் கார்பனும், மண்ணில் ஹெக்டேருக்கு 251.14 டன் கார்பனும் உள்ளதாக மதிப்பிட்டு உள்ளது.




# விளையாட்டுச் செய்திகள்

## உலக நாடோடி விளையாட்டுகள் 2026

- கிர்கிஸ்தானின் பிஷ்கெக் நகரில் நடைபெற்ற 6-வது உலக நாடோடி விளையாட்டுகளின் தொடக்க விழாவில் இந்தியப் பிரதமர் கலந்துகொண்டார்.
- நாடோடி மக்களின் மரபுகள் மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை மேம்படுத்துவதற்காக 2012 பிஷ்கெக் பிரகடனத்தின் மூலம் உலக நாடோடி விளையாட்டுகள் (WNG) நிறுவப்பட்டு, முதன்முதலில் 2014 ஆம் ஆண்டில் நடைபெற்றது.
- 2026 ஆம் ஆண்டு விளையாட்டுகளில் கோக் போரு, குராஷ், கோரேஷ், மங்கோல் போக், வில்வித்தை மற்றும் டோகுஸ் கோர்கூல் போன்ற பாரம்பரிய விளையாட்டுகள் இடம்


பெற்றுள்ளன.

- போலோவைப் போன்ற பாரம்பரிய கிர்கிஸ் குதிரையேற்ற விளையாட்டான கோக் போரு, 2017 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவால் (ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு) மனிதகுலத்தின் அருவமான கலாச்சார பாரம்பரியமாக அங்கீகரிக்கப் பட்டது.
- உலக நாடோடி விளையாட்டுகள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப் படுகின்றன.




# முக்கிய தினங்கள்

## தேசிய வனவிலங்கு தினம் 2026 - செப்டம்பர் 04




- வனவிலங்குகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், அவற்றைப் பாதுகாப்பதை ஊக்குவிப்பதையும் இந்த தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தேசிய வனவிலங்கு தினம் முதன்முதலில் 2005 ஆம் ஆண்டு செப்டம்பரில் கொண்டாடப் பட்டது, இது விலங்கு நடத்தை நிபுணரும் சமூக சேவகியுமான கொலின் பேஜ் என்பவரால் நிறுவப்பட்டது.

- இது பிப்ரவரி 22 மற்றும் செப்டம்பர் 4 ஆகிய தேதிகளில் ஆண்டுக்கு இரண்டு முறை அனுசரிக்கப் படுகிறது; ஸ்டீவ் இர்வின் அவர்களை கௌரவிக்கும் வகையில் செப்டம்பர் 4 சேர்க்கப்பட்டது.
- பருவநிலை மாற்றம், வாழ்விட அழிவு, வேட்டையாடுதல் மற்றும் வணிக ரீதியான சுரண்டல் போன்ற வனவிலங்குகளுக்கான அச்சுறுத்தல்களை இந்த தினம் எடுத்துக் காட்டுகிறது.
- இது வனவிலங்குகள் மற்றும் அவற்றின் இயற்கை வாழ்விடங்களின் பாதுகாப்பை மேம்படுத்துகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★